Registered as a News Paper in Sri Lanka

விலை ரூபா: 5-00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 03 ஞாயிற்றுக்கிழமை (18-11-2001) தொலைபேசி: 3378 ஒலி 342

மங்கையரின் மனம் மயக்கும் ஜவுளிகளின் எழில்மிகு காட்சியகம்
காவேரி
பட்டுச் சோலை
48, பெரியகடை வீதி
யாழ்ப்பாணம்
T. P 2333
(சி-2854)

## இனந்தெரியாத துப்பாக்கி இளைஞர்களால்

# ஐ. தே. கட்சியின் மட்டக்களப்பு தமிழ் வேட்பாளர் சுட்டுக் கொலை!

## 2001-ம் ஆண்டு தேர்தலின் முதற்கொலை

(மட்டக்களப்பு நிருபர் சுகுமார்]

**ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் தம்பிராசா ஜெயக்குமார் (வயது 49) நேற்று மாலை 5 மணியளவில் மோட்டார் சைக்கிளில்வந்த இனந் தெரியாத இரு இளைஞர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இச் சம்பவம் மட்டக்களப்பு கல்முனை வீதியில் ஒந்தாச்சி மடத்தில் நடைபெற்றது அடுத்த மாதம் 5ந்திகதி நடைபெறவுள்ளதேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுள் முதலாவதாக சுட்டுக் கொல்லப்பட்ட வேட்பாளர் இவராவார்.**

மட்டக்களப்பு - கல்முனை வீதியில் ஒந்தாச்சி மடத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிவிட்டு திரும்பும் வழியில் வீதியின் குறுக்கே மோட்டார் சைக்கிளுடன் நின்ற இரு வாலிபர்கள் ஜெயக்குமாரின் காரை கைகாட்டி மறித்தனர். ஆதரவாளர்களே தன்னை மறிக்கின்றார்கள் என்ற நினைப்பில் அவர் வாகனத்தை நிறுத்திய போது அந்த வாலிபர்கள் கண்மூடித் திறப்பதற்குள் அவரது தலையிலும், மார்பிலும் சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான ஜெயக்குமார் ஸ்தலத்திலேயே பலியானார். அவருடன் காரில் வந்த அவரது ஆதரவாளர்கள் மூவரும் காயங்கள் எதுவுமின்றித் தப்பிக்கொண்டனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட வேட்பாளர் ஜெயக்குமாரே காரைஓட்டி வநதவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவரது சடலம் தற்போது களுவாஞ்சிக்குடி வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்

(08ம் பக்கம் பார்க்க)

## வாக்குப்பெட்டிகளின் சீலை படையினர் உடைத்தனர்?

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள இராணுவக் கட்டுபபாடற்ற பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்டதபால் மூல வாக்குச்சீட்டுகள் மற்றும் வாக்கு பெட்டிகள விமான படையினரால் சீல் உடைக்கப்பட்டுபின்னர் சீல் வைக்கப்பட்டுள்ளதாகதெரிய வருகிறது

பொலிஸ்பாதுகாப்புஇன்றி வாக்குச் சீட்டுகள் மற்றும் வாக்குபெட்டிகளை இராணுவத்தினரும் விமானப்படை அதிகாரிகளும் பொறுப்பேற்று வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு எடுத்து சென்றதாகவும் தேர்தல் ஆணையாளரால் சீல் வைக்கப்பட்டிருந்த வாக்கு சீட்டு மற்றும் வாக்கு பெட்டிகளை விமானப்படை அதிகாரிகள் சீல் உடைத்து பரிசோதித்த பின்னர் சீல் வைத்ததாகவும் தெரிய வருகிறது

இதேவேளை உதவி தேர்தல் ஆணையாளர்களுக்கு

[8 ம் பக்கம் பார்க்க]

**உள்ளே --**

ஐக்கிய தேசியக்கட்சியின் யாழ் மாவட்ட பொதுத் தேர்தல் விஞ்ஞாபனம் -2001 பிரசுரம்.
(கி2890)

## வேட்பாளர்களை விலகுமாறு மட்டு. எல்லாளன் படை எச்சரிக்கை விடுத்திருந்தது

(மட்டக்களப்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் த. ஜெயக்குமாரின் கொலையில் எல்லாளன் படை சம்பந்தப் பட்டிருக்கலாம் என மட்டக்களப்பு பொலிஸ் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப் பட்ட பின்பு பெரும்பான்மை பேரினவாத சிங்களக் கட்சிகளில் வேட்பாளர்

[8ஆம் பக்கம் பார்க்க]

## கொல்லப்பட்ட ஜெயககுமார் பொலிஸ் இன்ஸ்பெக்டராக கடமை ஆற்றியவர்

(மட்டகளப்பு)

சுட்டுக் கொல்லப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் த. ஜெயக்குமார் (வயது49) கடந்த 25 வருடகாலமாக பொலிஸ் சேவையில் பணியாற்றி பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் பதவியில் இருந்து கடந்தவருடம் ஓய்வு பெற்றார். கடந்த வருடம் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் இவர் ஐ.தே.கட்சியின் சார்பில் போட்டியிட்டுத்தோல்வி கண்டவர். 1970ம் ஆண்டுக்கும், 1977ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில்

(8ஆம் பக்கம் பார்க்க)

## பொ.ஐ. முன்னணியும் -ஐ.தே.கவும் தேர்தலில் போட்டியிட முடியாது!

### உயர்நீதிமன்றில் பொதுமகன் மனுத்தாக்கல்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதால் எதிர்வரும் பொதுத் தேர்தலில் அக்கட்சிகள் போட்டியிடுவதற்கு உரிமையில்லை யென்று தெரிவித்து அவர்களின் வேட்பு மனுக்களை தடுக்க வேண்டுமென்று பொதுமகன் ஒருவர் உயர் நீதிமன்றில் அடிப்படைஉரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

கொடூர நடவடிக்கைகள் சித்திரவதைக்கு உட்படாது இருத்தல் சட்டத்தின் முன் சமத்துவம் ஆகிய மக்களின் உரிமைகளை மேற்படி இரு கட்சிகளும் மதிக்காது அதனை மீறிச் செயற்பட்டதால் அக்கட்சிகள் எதிர்வரு தேர்தலில் போட்டியிடுவதைத் தடுக்க வேண்டுமென்று கோரியே மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

[8 ம் பக்கம் பார்க்க]

## வாகனத்திற்கு தீ வைப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர் லலித்திஸநாயக்காவின்வாகனம் நேற்று இனம் தெரியாதோரால் தீ வைத்துக் கொழுத்தப்பட்டுள்ளது.

( 8 -ம் பக்கம் பார்க்க)

## மட்டு.தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கும் புளொட்டுக்கும் தொடர்பில்லை

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்புநகரில்கடந்த 15ந் திகதி இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில உயிரிழந்த மூன்று நபர்களுக்கும் தமக்கும் எதுவித தொடர்பு மில்லையென்று புளொட் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி நபர்கள் மூவரும் 1992ம் ஆண்டு தமது அமைப்

[8 ம் பக்கம் பார்க்க]

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் ஒரே தெரிவு



மக்களின் வாழ்வினாலேயே மண் வளம் பெறும்....
சொந்த மண்ணில் சுகமான வாழ்வு பெற....
வீணைக்கே உங்கள் வாக்குகள்
வீணையே உங்கள் தெரிவு!
சேவையே எங்கள் இலக்கு!



X

(C-2889)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

## சிறு விளம்பரம்


### ஜோதிடம்

பல இன மத ஆண் பெண் BA, BSc, Dr, Eng; தரங்களில் ஜாதகங்கள் உள்ளன. சரியான முறையில் திருமண பொருத்தம் பார்த்து தரப்படும். தொடர்பு ஸ்ரீ ராகவேந்திர ஜோதிடம்: 159A கோவில் வீதி, நல்லூர்.

[3967]

### உடன் தேவை

பாவித்த கதிரை, மேசை, அலுவலக மேசை உடன் தேவை. சரியான விலாச விபரங்களுடன் தொடர்பு விளம்பர இலக்கம் . 100, வலம்புரி இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம்.


## பரீட்சை ஒத்திவைப்பு

(கொழும்பு)

யாழ் உயர் தொழில்நுட்ப நிறுவன உயர் தேசிய முகாமைத்துவ டிப்பிளோமா கற்கை நெறியின் மூன்றாம் வருட இறுதிப்பரீட்சைகள் இம் மாதம் 15 ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த போதிலும் இப்பரீட்சைகள் எதிர் வரும் 26 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாகவும் மேலதிக விபரங்களுக்கு தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் நிறுவனஇயக்குநர் ரி. இராஜரட்ணம் அறிவித்துள்ளார். (உ-2)

## நூலகத்திற்கு நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியின் நூலகத்திற்கு உடனடியாகத் தேவைப்படும் புத்தகங்களை வாங்குவதற்கு விசேட நிதியாக ஒருலட்சத்து 75 ஆயிரம் ரூபாவினை தொழில்நுட்பப் பயிற்சித் திணைக்களப்பணிப்பாளர் நாயகம் பி. எம். ஜி. பிரேமசிறி ஒதுக்கியுள்ளார்.

இந்நிதிக்கு உடனடியாகப் புத்தகங்களை வாங்குமாறும் அவர் பணித்திருப்பதாக பிரதிப்பணிப்பாளர் என். யோகராஜன் அறிவித்துள்ளார். (வ)

## 27தமிழரினை கைதை அடுத்து சிங்கள இளைஞர் ஒருவரும் நேற்றுக் கைதானார்

(கொழும்பு)

வாதுவ பகுதியில் உள்ள வீடொன்றில்வைத்து27தமிழ் இளைஞர்களை வாதுவ பொலிசார் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தியதை அடுத்து சிங்கள இளைஞர் ஒருவர் நேற்று பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சிங்கள இளைஞரே தமிழ் இளைஞர்களுக்கு வீடு எடுத்துக் கொடுத்தவர் என்று தெரிவிக்கப் படுகிறது.

இளைஞர்களின் கைது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியும், பொதுஜன ஐக்கிய முன்னணியும் 27தமிழ்இளைஞர்களும் தங்கியிருந்த வீடு பரஸ்பரம் இருகட்சி ஆதரவாளர்களினது வீடு என்று ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டி வருகின்றனர். (வ)

## மரணதண்டனை நிறைவேற்றம்

(வாஷிங்டன்)

கொலைக் குற்றம் ஒன்றிற்காகஅமெரிக்காவைச் சேர்ந்த 41 வயதான ஜெவ்றிடக்கர் என்பவருக்கு அமெரிக்க அரசு விஷஊசி ஏற்றிக் கொல்லும் மரணதண்டனையை நிறைவேற்றியுள்ளது.

அமெரிக்காமீது விமானத் தற்கொலைத் தாக்குதல் நடந்த தினமான செப்ரெம்பர் 11 இல் நிறைவேற்றப்பட வேண்டிய மரணதண்டனையே அண்மையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் அதிஉயர் தண்டனை நிறைவேற்றப்படும் மாகாணமான டெக்ரெசில் இவ்வருடம் 15 பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-5)

## ஸ்கந்தா அணி வென்றது

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஏற்பாட்டில் நடைபெற்று வந்த பாடசாலைகளுக்கிடையேயான 21 வயதிற்குட்பட்ட உதைப்பந்தாட்டத்தின் இறுதிப் போட்டி கடந்த புதன்கிழமை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் ஸ்கந்தா அணிக்கும் வசாவிளான்ம.வி. அணிக்கும் இடையே நடைபெற்றது

இதில் ஸ்கந்தா அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது

ஆட்ட நேரத்தில் இருஅணிகளும் சம நிலையில் விளங்கியமையால் மேலதிக உதைகள் வழங்கப்பட்டன.

இதில் ஸ்கந்தா அணி 4:3 கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இப்போட்டித் தொடரில் மூன்றாம் இடத்தை யூனியன் கல்லூரி அணிபெற்றது. (உ-2)


# Invitation of Bids for additional works In Teachers Centres

Credit No. 2881 CE

**Teacher Education & Teacher Development Project**
**Provincial Department of Education**
**NOTHERN PROVINCE**

01. The Democratic Socialist Republic of Sri Lanka has received a credit from the International Development Association towards the cost of the Teacher Education and Teacher Development Project and intends to apply part of the funds to the eligible payments under the contract for the following 02 contract packages Bidding is open to all bidders from eligible source countries as defined in the Guiderlines. Procurement Tender IBRD Loans and IDA Credits. All domastic construction contractors registered with ICTAD as mentioned in the Bidding Data are eligible to bid.

| Bid Code No. | Name of the Contract Additional Works to Tender centres | Minimum Grade of Registration with ICTAD | Required Bid Security Rs. |
|---|---|---|---|
| TETD/NP Package I | TC J/Manipay Hindu College<br>TC J/Varany M V | M 9 | 1200–00 |
| TETD/NP Package II | TC J/Nelliady M M V | M 9 | 1200–00 |

02. The Zonal Director of Education Vadamaradchy invites separate sealed bids from eligible bidders for the construction of packages 1 & 2 as mentioned above.

03. Bidding documents may be purchased from the office of the Zonal Department of Education, Vadamaradchy from 9–00 A. M. on 19–11–2001 to 29–11–2001 for a non–refundable fee of Rs. 500/– with refundable deposit Rs. 1200/– Interested bidder may obtain further information at the above address.

04. Bids shall be valid for a period of 60 days after bid opening and each bid must be accompanied by a bid security as mentioned in the bidding data and shall be delivered to the chairman, Tender Board, Zonal Department of Education, Vadamaradchy on or before 10–00 A.M. on 20.12.2001 at which time the bids will be open in the presence of the bidders or their authorized representatives.

Zonal Director of Education,
Zonal Education Office,
Vadamaradchy,
Puloly.
Date: 17–11–2001

(C/2888)

யாழ். திருமறைக் கலாமன்றம் நடத்தும்

# கலைப்பாலம்- 2001

★ நிகழ்ச்சி நேர மாற்றம் ★

★ இன்று 18-11-2001 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவிருந்த நிகழ்ச்சிகள் பி.ப. 2 30மணிக்கும்

★ பி.ப. 2மணிக்கு மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருந்த நிகழ்ச்சிகள் மு.ப. 10மணிக்கும் இடம்பெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

★ நாளை (19-11-2001) திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு விசேட நிகழ்ச்சியாக 'தரிசனம்' மௌன நாடகம் திருமறைக் கலாமன்ற அரங்கில் இடம்பெறும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

-திருமறைக்கலாமன்றம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி- 021- 2393

(C/ 2887)

# தீவக வாக்காளப் பெருமக்களே

'என் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய் நன்றி கொன்ற மகற்கு"

என்ற வள்ளுவன் வாக்கிற்கு அமைய; சுடுகாடாய் மயானமாய் ஆந்தையும் கோட்டானும், வௌவ்வாலும், கெருடனும் குடியிருக்கும் இடமாய் காட்சியளித்த எம் பொன் கொழிக்கும் தீவக தாய் மண்ணில் எம்மை மீண்டும் குடியமர்த்தி மனித வாழ்க்கைக்குத் தேவையான சாத்தியக் கூற்று வசதிகளையும் ஏற்படுத்தி, அன்னமிட்ட கைகளை இருள் போக்க ஒளித்தீபந் தந்த அன்புக்கரங்களை எம்மால் மறக்க முடியுமா? இல்லவேயில்லை கடன் தீர்ப்போம்,செஞ்சோற்றுக்கடன் தீர்ப்போம்.



X வீணையே எங்கள் சின்னம்
ஈ.பி.டி.பி. கட்சியே எங்கள் கட்சி,
நாம் அனைவரும் ஓர் அணியில் திரண்டு
வீணைக்கு வாக்களிப்போம்,

(3973) தம்பாட்டி வாழ் மக்கள்

## உள்நாட்டுப் பிரச்சினைக்கு

# பிரிவினை தவிர்ந்த வேறு வழியில் தீர்வு காணும் வகையில் கட்சிகள் செயற்படவேண்டும்

### பரப்புரைக் கூட்டத்தில் சுபத்திரன் கருத்து

(தென்மராட்சி)

நாங்கள் தேர்தலில் போட்டியிடுவதை மட்டும் நோக்கமாகக் கொண்டு அரசியலுக்குள் வரவில்லை. சமூக விடுதலைப் போராட்டத்திலும் நாம் அதீத கவனம் செலுத்தி வந்துள்ளோம். சமூக ஒடுக்குமுறை, பெண் ஒடுக்குமுறை மற்றும் பொருளாதாரஏற்றத் தாழ்வுகளுக்கெதிராகவும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்திவருகின்றோம்.

இவ்வாறு பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் சுயேட்சைக் குழுவாகப் போட்டியிடும் ஈ. பி. ஆர். எல் எவ் (வரதர் அணி) யின் முதன்மை வேட்பாளரான தம்பிராசா சுபத்திரன் (றொபேட்) அச்சுவேலியிலுள்ள கூட்டுறவுச்சங்கத்தின் பணியாளர்கள் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்; இன்றுள்ள சூழ்நிலையில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பிரிவினைக்குஆதரவு குறைந்து வருகின்றது.

### தேர்தல் வியூகம்

எமது இனப் பிரச்சினையில் பிரிவினை தவிர்ந்த வேறெந்த வகையில் தமிழ் மக்களுக்குரிய அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை தமிழ் அரசியல் கட்சிகள் சிந்தித்துச் செயற்படுத்த வேண்டும்.

ஆயுதப் போராட்டம் நடத்திய இயக்கங்கள் ஏனைய இயக்கங்களை தடை செய்ய முற்பட்ட போது போராட்டத்தில் தேக்கநிலை தோன்றியது.

அந்த நிலையில் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு ஜனநாயக வழியில் செயற்பட்டு வருகிறோம் என்றார்.

இக் கூட்டத்தில் கர்சிவ ராஜா (மோகன்) உட்பட வேறும் பலர்கருத்துரை வழங்கினர். (உ-77)

# ஆயுதக் குழுக்களுக்கு வாக்களித்து வாழ்வை இருண்டதாக்காதீர்!

### பிரசாரக் கூட்டத்தில் மகேஸ்வரன் வேண்டுகோள்

(துன்னாலை)

நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பில் சட்டவிரோத ஆயுதக் குழுக்கள் இணைந்துள்ளன; அக் கூட்டமைப்புக்குவாக்குப் போடுவது யாழ்ப்பாணத்தில் மீண்டும் ஆயுதக் கலாசாரம் மேலோங்க வழிவகுப்பதாக அமையும்.

கடந்த புதனன்று பி.ப 4 மணியளவில் வடமராட்சி கரணவாய் மூத்த விநாயகர் கோவிலடியில் இடம்பெற்ற ஐக்கியதேசியக் கட்சியில் 10 ஆவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய அக் கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் தி. மகேஸ்வரன் மக்களிடம் இவ்வாறு கருத்து முன்வைத்தார்;

அவர் தொடர்ந்து கூறியதாவது,

எதிர்கால வாழ்வை தீர்மானிக்க வேண்டிய அதிமுக்கிய கட்டத்தில் மக்களாகிய நீங்கள் உள்ளீர்கள்;

ஆயுதக் குழுக்களுக்கு வாக்குப் போட்டு உங்கள் ஒளிமயமான வாழ்வை இருண்டதாக்காதீர்கள்.

உதய சூரியன் சின்னமோ தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற நாமமோ ஆபத்தில் உள்ள உங்களைக் காப்பாற்றப் போவதில்லை.

இந்த மக்களுக்கான உரிமைகள் புலிகளின் உயிர்த் தியாகத்தினாலும்உறுதியினாலும் மட்டுமே கிடைக்கக் கூடியன.

### வேட்பாளர் கணை

மாறாக இவர்கள் கூறுவது போல பாராளுமன்ற செல்வாக்கால் கிடைக்கப் போவதில்லை;

இதனை உணர்ந்தே புலிகள் 20 வருடங்கள் முன்பே ஆயுதம் ஏந்தினர்;

வாக்கு வங்கியை நிரப்புதற்கான தந்திரமாக, மீண்டும் யாழ்ப்பாணம் வருகைதந்த கூட்டணியினர் புலிகளின் பெயரைக் கூறி வருகின்றனர்.

இம்முறை இடம்பெறவுள்ள தேர்தலில் 120 ஆசனங்களை ஐக்கியதேசியக் கட்சி கைப்பற்றப் போகிறது;

கைப்பற்றுவது மட்டுமன்றி அத்தனை பேரும் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக ஒருமித்துக் குரல் கொடுக்கப் போகின்றனர் என்பது உறுதி என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் உரையாற்றுகையில், ஈ. பி. டி. பி. யினருடைய செயற்பாடு மக்கள் நலன் கருதியதல்ல.

மக்கள் நலன் கருதியதாக அமைந்திருக்குமானால் பருத்தித்துறையில் இருந்த பயண அனுமதி வழங்கும் காரியாலயத்தை யாழ்ப்பாணம் மணியம் கட்டடத்திற்கு மாற்றும் நிலை வந்திருக்காது எனத்தெரிவித்தார். (உ-41)

## பருத்தித்துறை நகராட்சி மன்றம்

# மீள் கேள்வி அறிவித்தல்

2002.01.01 தொடக்கம் 2002.12 31 வரையான காலப்பகுதிக்குகீழ்க் குறிப்பிடப்படும் கேள்விகள் 2001.11.22 ஆம் திகதி நண்பகல் 12.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். 2001.11.20 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணி வரை கேள்வி விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

### அட்டவணை

| கேள்வி விபரம் | நிர்ணயித்த தொகை | மீளளிக்கப் படக்கூடிய பிணைப்பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் | ப.சே. வரி |
|---|---|---|---|---|
| 1. மரக்கறிச் சந்தை (கடைகள் நீங்கலாக) | 300,000.00 | 3,000 00 | 250.00 | 31.25 |
| 2. மிதிவண்டிபாதுகாப்பு நிலையம் | 110,000.00 | 1,150.00 | 250.00 | 31 25 |

தமது கேள்வித் தொகையின் 12 5% தொகை பண்டங்கள் சேவைகள் வரியாக மேலதிகமாகச் செலுத்தப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ச. அன்ரன் கிறைசிஸ்
செயலாளர்,
நகராட்சிமன்றம், பருத்தித்துறை.

அ. வின்சன் கெனடி,
ஜே பி. யு. எம்.
தலைவர்,
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.
2001 11.12

(சி-2885)

## ஊம நாடகம் மேடையேற்றம்

(யாழ்ப்பாணம்)

கலைப்பாலம் 2001 இன் விசேட நிகழ்வாக நாளை மாலை 6.30 மணிக்கு 'தரிசனம்' ஊம நாடகம் திருமறைக்கலாமன்ற அரங்கில மேடையேறவுள்ளது.

இந் நாடகத்தில் தமிழ்-சிங்கள கலைஞர்கள் இணைந்து நடிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-106)

## துப்பாக்கி சூட்டில் இருவர் காயம்

(நீர்கொழும்பு)

நீர்கொழும்புப் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் இருவர் காயமடைந்துள்ளனர்.

ஐக்கியதேசியக் கட்சி ஆதரவாளர்களே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## இராசி பலன்

(18-11-2001)
கார்த்திகை 3, ஞாயிறு
திருதியை மு.ப 11.35
மூலம் மு இ 9. 55
இராகுகாலம் 4 35-6.08
சுபநேரம் 9.08-10 38
சதுர்த்தி விரதம், அமிர்த சித்தம்

**மேடம்**
புதிய திட்டமிடல், மனச் சஞ்சலம், கட்டுப்பாடு, பிரயாணம்.

**இடபம்**
எதிர்பாராத பிரச்சினை, உடல் வியாதி, காரிய தடங்கல், திருடர் பயம்,

**மிதுனம்**
பிரயாண சுகம், காரிய நன்மை, பெரியோர் மதிப்பு, தனலாபம்;

**கடகம்**
வியாதி குணமடைதல், செய் தொழில்விருத்தி, காரிய அனுகூலம், மன மகிழ்ச்சி,

**சிங்கம்**
வியாபார சிறப்பு, தாழ்ந்த சுபாவம், குடும்ப பிரச்சினை, முயற்சி தாமதம்;

**கன்னி**
தொழில் நன்மை, வியாதி, மனச்சஞ்சலம், காரிய தாமதம்.

**துலாம்**
காரிய அனுகூலம், கூட்டு முயற்சி, பெருள சேர்க்கை, அந்நியர் சந்திப்பு.

**விருச்சிகம்**
சொத்துக்களால் நன்மை, உஷ்ண ரோகம், வாக்கு கலகம், தனவிரயம.

**தனுசு**
ஜனவசியம், நண்பர் உதவி, கற்பனை மிகுதி, காரியம் கைகூடும்.

**மகரம்**
தொழில் முன்னேற்றம், சுப காரியம செலவு, காரிய தாமதம், சோகம்;

**கும்பம்**
காரிய அனுகூலம், கீர்த்தி, தெய்வ சிந்தை, எதிர்பாராத நன்மை.

**மீனம்**
கடின உழைப்பு. நல்ல நிழ்வு. முயற்சி கைகூடும், அதிகாரய.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## தேர்தல் பணிகள் துரிதகதியில் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 5 ஆம் திகதி இடம் பெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் யாழ் மாவட்டத்தில் துரிதகதியில் இடம் பெற்று வருகின்றன.

இம் முறை யாழ். மாவட்டத்தில் உள்ள 196 இடங்களில் 423 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன;

அத்துடன், 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணி எதிர் வரும் புதன் கிழமை முதல் 27 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளதை யடுத்து தபாலகங்கள் மற்றும் உபதபாலகங்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தவிர, கடந்த முறை பாராளுமன்றத் தேர்தலில் வாக்குச் சாவடி அமைக்கப்படாத தென்மராட்சிப் பகுதிகளில் பொது மக்கள் வாக்களிக்க ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதுடன்,

பொது மக்களின் நலன் கருதி இலவசப் போக்குவரத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. (உ-19)

## பீரிஸின் கூற்றுக்கு மத்திய வங்கி மறுப்பு

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியை திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்வதில் எந்தவிதமான அபாயமும் இல்லை என்று மத்தியவங்கி கூறியுள்ளது.

ஊழியர் சேமலாபநிதி முதலீடுகள் அபாயத்தினை எதிர்நோக்கியிருப்பதாக முன்னாள்அமைச்சர்ஜி எல். பீரிஸ் மேற்கொண்டுள்ள பிரசாரத்தில்எந்தவிதமானஉண்மையும் இல்லை என்று மத்திய வங்கி மேலும் கூறியுள்ளது.

பேராசிரியர்ஜி எல். பீரிஸ் பிரதி அமைச்சராக இருந்த போது ஊழியர் சேமலாபநிதி பாதுகாப்பாகவே இருந்து வந்துள்ளது என்று அவர் வற்புறுத்தி வந்துள்ளார் என்றும் மத்தியவங்கி குறிப்பிட்டுள்ளது. (வ)

# முதியோர் இல்லத்தில் தங்கியுள்ளோர் உரிய பராமரிப்பின்றித் தவிப்பு

## அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் சுட்டிக்காட்டு

(தென்மராட்சி)

மூளாய் கூட்டுறவு வைத்திய சாலைக் கட்டிடத்தில் இயங்கி வரும் கைதடி முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியவர்கள் சீரான முறையில் பராமரிக்கப்படுவதில்லை என அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது, அங்குள்ள முதியோர்களைப் பராமரிப்பதற்கெனப் போதிய ஊழியர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள போதிலும் கூட முதியோர்கள் தொடர்ந்தும் பராமரிப்பற்ற நிலையிலேயே இருந்து வருவதாகவும்;

இந்த இல்லத்தினை மேற்பார்வை செய்வதற்கு யாருமே செல்வதில்லை எனவும் கூறப்பட்டுள்ளது.

இந்த இல்லத்தின் செயற்பாடுகள் பற்றிய விபரங்களை அறியும் பொருட்டு குழுவொன்று விரைவில் அங்கு செல்ல இருப்பதாகவும் தெரிய வருகின்றது. (உ-77)

## முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கணனிக் கல்வி மாணவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று மு.ப 10 மணிக்கு இடம்பெறவுள்ளதாகவும்;

அதில் கல்லூரியின் மகேஸ்வரி கணனிவள நிலையத்தின் புதிய பிரிவு மாணவர்களையும் ஏற்கனவே நடைபெற்றுக்கொண்டிருக்கும் கணனிப் பிரிவு மாணவர்களையும் முறைசாராக் கல்விப் பிரிவில் கணனிச் கற்கை நெறிக்கு பதிவுசெய்த அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை அறிவித்துள்ளார். (உ)

## தீபாவளி தினத்தில் கைகலப்பு; இருவர் காயம்

(மந்திகை)

தீபாவளி தினத்தில் இரு வேறு பகுதிகளில் நடைபெற்ற கைகலப்பில் காயமடைந்த இருவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை தும்பளைப் பகுதியில் நடைபெற்ற கைகலப்பில் இதே இடத்தைச் சேர்ந்த கனகன் அருச்சுனா (வயது 42) என்பவர் கத்திக்குத்திற்கிலக்கானார்.

கரவெட்டி இராஜ கிராமத்தில் நடைபெற்ற கைகலப்பில் கந்தசாமி சிவசோதி (வயது 42 என்பவர் பொல் அடிக்கிலக்கானார். (செ-23)

## தபாலகங்களில் 24 மணிநேர பாதுகாப்பு பணியில் படையினர்

(மந்திகை)

எதிர் வரும் டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் விநியோகத்தில் ஈடுபடும் தபால், உபதபால் நிலையங்களுக்கு பொலிஸ் இராணுவப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த வியாழன் முதல் 24 மணி நேரமும் இப்பாதுகாப்புப் பணி இடம் பெற்று வருகின்றது. (உ-23)

## கொடுப்பனவை பெறலாம்

(மானிப்பாய்)

வலி:தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில், வன்செயல்களால் வீடு பாதிக்கப்பட்டோருக்கான கொடுப்பனவு பெறத்தகுதியான 51 பேரின் பெயர்ப்பட்டியல் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான காசோலைகள் அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்டவர்கள், அவற்றைப்பெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-120)

## விளையாட்டு செய்திகள்

## குத்துச்சண்டை போட்டி இலங்கையில் இடம்பெறும்

(கொழும்பு)

உலகின் பிரபல குத்துச்சண்டை போட்டித் தொடரான பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான குத்துச்சண்டைப்போட்டி 2002இல் இலங்கையில் நடைபெறவுள்ளது:

2002 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20-27 ஆம் திகதி வரை கொழும்பு சுகததாஸ அரங்கில் இப்போட்டியை நடத்த சர்வதேச குத்துச்சண்டை சங்கம் தீர்மானித்துள்ள போதும் நிதிப் பிரச்சினைக்கு முகம் கொடுக்கும் நிலை உள்ளதாக கூறப்படுகிறது.

இப்போட்டியை இலங்கையில் நடத்த 40 லட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்படுகின்றது.

15 நாடுகள் இப்போட்டியில் பங்கேற்க விருப்பம் தெரிவித்துள்ளன. (உ-2)

## ஆசிய ரக்பி கிண்ண சுற்றுப் போட்டி

(கொழும்பு)

இவ்வாண்டின் 19 வயதின் கீழ் ஆசிய ரக்பி கிண்ண சுற்றுப் போட்டி வரும் டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை ஜப்பானின் புகோகாவில் நடைபெறவுள்ளது இப்போட்டித் தொடரில் இலங்கை அணியும் கலந்து கொள்ளவுள்ளது.

இலங்கை அணி முதலாவது போட்டியில் ஜப்பானுடனும், இரண்டாவது போட்டியில் சிங்கப்பூர் அணியுடனும் விளையாடவுள்ளது.

இறுதிப் போட்டி டிசம்பர் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (உ-2)

## வீரர்களின் விபரங்களை இணையத்தில் பார்க்க வசதி

சர்வதேச கிரிக்கெட் வீரர்களின், விளையாட்டு விபரங்கள் அடங்கிய தகவல்களை இலகுவாக பெறக்கூடிய வகையில், இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை 'கிறின் போ' இணையத்தளத்துடன் 12 மாத கால ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

உலக கிரிக்கெட் தகவல் நிலைய கொம்பனியின் இணையத்தளமான 'கிறின் போ, இல் அனேக கிரிக்கெட் வெப்தளங்கள் உள்ளன இதன் தலைமை அலுவலகம் லண்டனிலும் பிராந்திய அலுவலகங்கள் இலங்கை, அவுஸ்திரேலியா, இந்தியா, நியூசிலாந்து பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, சிம்பாவே ஆகிய நாடுகளிலும் உள்ளன. (உ-2)


# எதிர்காலம் நாமே...

# ரண் கெகுளு

ரண் கெகுளு சேமிப்பு மாதம்

அக். 31 முதல்
நவ. 30 வரை

## இத்துரும் வாசனா

உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக
சேமித்து பரிசுகளை வெல்லுங்கள்.
'ரண் கெகுளு இத்துரும் வாசனா' மூலம்
அதிர்ஷ்டத்தை பெறுவது மிக இலகுவாகும்.

நவம்பர் 30-ம் திகதிக்கு முன்னர்...

★ உங்கள் மகன்/மகளின் "ரண் கெகுளு" சேமிப்புக் கணக்கில் ரூபா 3000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை வைப்பிலிடுங்கள்.

★ தற்போது "ரண் கெகுளு" சேமிப்புக் கணக்கொன்று இல்லையெனில் ரூபா 3000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை வைப்பிலிட்டு உடனடியாக கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

"ரண் கெகுளு வாசனா" மூலம் உங்கள் பிள்ளைகளுக்கும் வெற்றி
உங்களுக்கும் வெற்றி

## இலங்கை வங்கி

உங்கள் தேவைகளைச் சந்திக்கும்

(C 2886)

## இன்று ஒரு தகவல்

# பழக்கத்தின் வலிமை

முன்னொரு காலத்தில் சீனநாட்டில் அரசனை எதிர்த்துப் புரட்சி செய்தான் என்பதற்காக ஒருவனுக்கு ஆயுட்காலம் முழுமையும் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. இருண்ட கொடுஞ் சிறைக்குள் அடைக்கப்பட்டான் அவன். கதிரவன் ஒளியையே அங்கு பார்க்க முடியாது. பெருச்சாளிகளும், எலிகளும் அவனறைக்குள் அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தன. ஒரு நாளைக்கு இரண்டு முறை காவலர்கள் அவனுக்கு உணவை வைத்து விட்டுப் போவார்கள். ஆண்டுகள் உருண்டோடின இப்படியே முப்பது ஆண்டுகள் கழிந்தன.

பழைய அரசன் இறந்து புதிய அரசன் பட்டத்துக்கு வந்தான். முடிசூட்டு விழாவை ஒட்டிக் கைதிகள் எல்லோரும் விடுதலை செய்யப்பட்டனர். முப்பதாண்டுகள் சிறையிலிருந்த பின் வெளியே வந்தஅவன், 'வெளியுலகத்தைப் பார்க்க என் கண்களுக்கு ஆற்றலில்லை. இந்த ஒளி வெள்ளத்தை என்னால் தாங்க முடியவில்லை. இருளும், எலிகளும் நிறைந்த பழைய சிறைக்கே என்னை அனுப்பி விடுங்கள். இல்லையேல் என்னைக் கொன்று விடுங்கள். ஐயோ! என்னால் இங்கு ஒரு நிமிடம் கூட இருக்கமுடியவில்லையே' என்று கதறி அழுதான். அவன் மீது இரக்கப்பட்ட அரசன் மீண்டும் அவனைச் சிறைக்கே அனுப்பி வைத்தான்.

பேராசிரியர் எ. சோதி

கட்டடம் அமைக்க

# காணி இல்லாமையால் ஒதுக்கிய நிதி திருப்பிச் செல்லும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ் உயர் தொழில் நுட்ப நிறுவனத்தின் வளர்ச்சிக்காகவும் கட்டிடங்கள் அமைப்பதற்காகவும்ஆசிய அபிவிருத்தி வங்கியினால் ஒதுக்கப்பட்ட 91.5 மில்லியன் ரூபா நிதி பயன்படுத்தப்படாமல் தேக்கமடைந்துள்ளதாகவும், இந் நிலை தொடர்ந்தால் நிதி திரும்பிச் சென்றுவிடக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கவலை வெளியிட்டுள்ளன.

உயர் தொழில் நுட்ப நிறுவனத்திற்குச் சொந்தமாக காணிஇல்லாமையால் கட்டடம் அமைப்பதில் ஏற்படும் தாமதமே இந் நிலைக்குக் காரணம் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

போதிய கட்டிட வசதிகளும் பிற வசதிகளும் இல்லாமையினால் இங்கு பயிலும் மாணவர்கள் மிகுந்த நெருக்கடியின் மத்தியிலேயே கல்வி கற்க வேண்டி உள்ளதும், பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்கள் இந் நிறுவனத்தில் கற்பதன் மூலம் தரமான கல்விசான்றிதழ்களைப் பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந் நிறுவனத்தில் பொறியியல் பீடம் அமைக்க அனுமதி கிடைத்தும் போதிய கட்டிட வசதி இன்மையினால் இதுவரை இக் கற்கை நெறி ஆரம்பிக்கப்படவில்லை என்பதும் தெரிந்ததே. (உ-2)

வடக்கு-கிழக்கில்

# 2 ஆயிரம் பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படும்

[கொழும்பு]

வடக்கு-கிழக்கில் 2 ஆயிரம் பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கு அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

இந்நியமனத்தில் பட்டதாரிகளும், க. பொ. த. (உ/த) பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் உள்வாங்கப்படவுள்ளனர்.

இது தொடர்பாக கடந்த வியாழன் அமைச்சரவையில் முடிவு செய்யப்பட்டது.

மேலும் வருடாந்தம் 750 பட்டதாரிகளுக்கு மொழிப் போதனாசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது.

இவர்கள் வெளிநாட்டு மொழிகளைப் போதிப்பவர்களாக நியமிக்கப்படுவார்கள் என்றும் முடிவு செய்துள்ளது. [செ]

நகுலேஸ்வரர்ஆலயம்செல்ல

# பொது மக்களுக்கு படையினர் அனுமதி

(கொழும்பு)

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு செல்வதற்கு பொது மக்களுக்குபடையினர் அனுமதி வழங்கியுள்ளதாக இவ்வாலய ஆதீனதர்மகர்த்தா சிவஸ்ரீ நகுலேஸ்வரக்குருக்கள் தெரிவித்துள்ளார்.

கார்த்திகைத் திங்கள், சோமவாரம் போன்ற விரத தினங்களில்பக்தர்கள் இவ்வாலயத்திற்கு சென்றுவர படையினர் அனுமதித்துள்ளனர்.

எதிர்வரும்19,20ஆம் திகதிகளிலும் டிசம்பர் மாதம் 3,10 ஆம் திகதிகளிலும் உற்சவங்கள நடைபெறவுள்ளன.

இதன்போது மக்கள் தமது அடையாள அட்டைகளை சோதனைச் சாவடிகளில் ஒப்படைத்து விட்டு படையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வாகனங்களில ஆலயத்திற்கு சென்று வரமுடியும்.

இருபது ஆண்டுகளுக்கு பின்னர் இவ்வாறு அனுமதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)

# எரிபொருள் விநியோகம் விரைவில் சீராகும்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் விநியோகிப்பதற்காக எரிபொருள் விரைவில் எடுத்துவரப்பட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும்,

எரிபொருள் தாங்கிக் கப்பல் வடபகுதியை வந்தடைந்ததும் எரிபொருள் விநியோகம் இரண்டொரு தினங்களில் சீராகும் எனவும்ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தகவல் தொடர்புத்துறை வெளியிட்டுள்ளசெய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் எரிபொருள விநியோகம் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளமை குறித்தும் அதனால் பொதுமக்கள மற்றும் மாணவர்கள எதிர் நோககும் இடர்கள் குறிததும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டதற்கணங்க-

பெற்றோலியக் கூட்டுத்தாபன உயர் அதிகாரிகள மற்றும் பாதுகாப்புத் தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதையடுத்து வடபகுதியில் விநியோகிப்பதற்காக விரைவில் எரிபொருள் எடுத்து வரப்படவுள்ளது. (உ)

# மக்கள்குழு அமைப்பு

(மானிப்பாய்)

நீதி அமைச்சரின் பணிப்புரைக்கமைய யாழ் மாவட்டத்தில் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக 5பேர் அடங்கிய மக்கள குழுக்களை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (உ-120)

# இடமாற்ற விபரங்கள் அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் எழுதுவினைஞர் அதனோடிணைந்த சேவைகளைச் செய்வோர் மற்றும்தொழில் நுட்ப உத்தியோகத்தர், நூலகர், இறைவரிப் பரிசோதகர் ஆகியோருக்கான 2002ஆம் ஆண்டிற்கான இடமாற்றம் தொடர்பான விபரங்கள் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும்உள்ளூராட்சிஆணையாளர் அனுபபி வைத்துள்ளார். (உ-61)

# கசிப்பு கடத்தியோர் பிடிபட்டனர்

(கோப்பாய்)

நள்ளிரவு வேளை கசிப்புக் கடத்தியோர் விழிப்புக் குழுவினரிடம் கையும்மெய்யுமாகப்பிடிபட்ட சம்பவமொன்று அண்மையில் கோப்பாய் இராச வீதிப்பகுதியில் இடம் பெற்றுளளது.

இச்சம்பவம் தொடர்பாக விழிப்புக் குழுவினர்விசாரித்த போது தாய பொலித்தின் பைகளிலும் மண் ஏற்றிச் செல்லும உழவு இயந்திரங்களிலும் போததலுடன் கசிப்பைக்கடத்தி வருவதாக தெரிவித்துள்ளனர். (உ-5-79)

180 நாள் சேவையை பூர்த்தி செய்த

# அமைய ஊழியர்களுக்கு விரைவில்நிரந்தர நியமனம்

(மானிப்பாய்)

அரசதிணைக்களங்களில் அமைய அடிப்படையில் பணிபுரியும் 180 நாள் சேவையை பூர்த்தி செய்த அலுவலக ஊழியர்கள் அனைவரும் நிரந்தரமாக்கப்படவுள்ளனர்.

இதற்கேற்ற வகையில், இவர்கள் பற்றியவிபரங்களை உடன் அனுப்புமாறு மாகாண பொது நிர்வாக உள்ளூராட்சி கிராமிய அபிவிருத்தி கைத்தொழில் அமைச்சு சகல திணைக்களத் தலைவர்களையும் கேட்டுள்ளது.

இது சம்பந்தமான சுற்று நிருபமொன்றும் திணைக்களத் தலைவர்கள், செயலாளர்கள், பிரதேச செயலர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுளளது. (உ-120)

கல்வியியற் கல்லூரி அனுமதிக்கான

# நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும் திகதிகள்

(யாழ்ப்பாணம்)

2001 ஆம் ஆண்டுக்குரிய தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு ஆசிரிய பயிலுனர்களைச் சேர்த்துக் கொளவதற்கான நேர்முகப் பரீட்சைகள் கல்வி உயர்கல்வி அமைச்சினால் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் வவுனியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய மூன்று தேசிய கல்வியியற் கலலூரிகளுக்கும்ஆசிரியமாணவர்களை அனுமதித்தல்பற்றியதகைமையைப் பரிசீலனை செய்வதற்கானநேர்முகப்பரீட்சைகளை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் பீடாதிபதி செ. அழகரெத்தினம் தலைமையிலானநேர்முகப் பரீட்சை குழு நடத்தவுளளது.

பின்வரும் தினங்களில் இந்த நேர்முகப்பரீட்சைகள் நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொளளப்பட்டுள்ளன. திருகோணமலையில் உவர்மலை விவேகானநதா மகாவித்தியாலயத்தில் கார்த்திகை மாதம் 17 ஆம் 18 ஆம் திகதிகளிலும் வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியில் கார்த்திகை மாதம் 19 ஆம் 20 ஆம் திகதிகளிலும், மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியில் கார்த்திகை 22 ஆம் 23 ஆம் 24 ஆம திகதிகளிலும், கோப்பாய் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கார்த்திகை மாதம் 26 ஆம், 27 ஆம், 28 ஆம் 29 ஆம 30 ஆம் திகதிகளிலும் வன்னிப் பகுதி மாணவர்களுக்காக இம்முறை முதற் தடவையாக மல்லாவி வலயக்கல்விப் பணிமனையில் மார்கழிமாதம் 08 ஆம் 09 ஆம் 10 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன.

அவ்வப்பகுதியைச் சார்ந்த மாணவர்களின் நலன், செலவுச்சிக்கனம் ஆகியவை கருதியே இவ்விசேட ஒழுங்குகள் மேற்கொளளபட்டுள்ளதாக பீடாதிபதி அழகரெத்தினம் தெரிவித்துள்ளார். இம்முறை புள்ளி முன்னுரிமை அடிப்படையில் 75% மாணவர்களும், பின்தங்கிய கஷ்டப் பிரதேசங்களில் இருந்து 25% மாணவர்களும ஆண் பெண் வித்தியாசமின்றி குறித்த பாடங்களுக்கான ஒரே வெட்டுப்புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

# காப்புறுதி சான்றிதழ் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

இவ் வருடமாசி மாதம் விவசாய ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்தவர்களுக்கான ஒப்பந்தச் சான்றிதழைக் கமத்தொழில் காப்புறுதி மாவட்டக் காரியாலயத்தில்பெற்றுக் கொள்ளுமாறு கமநலசேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசன் கேட்டுள்ளார். (உ-19,9)

# தீபாவளி தினத்தில் தீ வைப்பு

(கோப்பாய்)

உரும்பிராய் கிழக்குப் பகுதியில நடந்த தீபாவளித்தினத்தன்று கள்ளுத்தவறணை ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுளது.

இதனால் தவறணை முற்றாக எரிந்து சாம்பலாகியதுடன் அங்கிருந்த தளபாடங்களும் சேதமடைந்துள்ளன. (உ-5-79)

# வேலையிழந்த தனியார் ஊழியருக்கு 25 ஆயிரம் ரூபா வழங்கப்படும்

## அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

1980 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு பதவிகளை இழந்த தனியார்துறை ஊழியர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக தலா 25 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

தொழில் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட 352 விண்ணப்பங்களை ஆராய்ந்த பின்னர் அமைச்சரவை இவ்வாறு முடிவு செய்துள்ளது.

1980 ஆம் ஆண்டு சுமார் 2 ஆயிரம்பேர் பதவிகளை இழந்துள்ளனர். ...வித இழப்பீட்டுத் தொகைகளையும் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கே மேற்படி 25 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

ஆயிரத்து 426 பேர் ஏற்கனவே தமக்குரிய இழப்பீடுகளைப் பெற்றுக்கொண்டுள்

## சிந்தனைக்கு விருந்து

### நா வலிக்கப் பாடுவோம்

வழியும் வழியிலக்கும் வாழ்வும் வளமும்
கொழியின்ப முங்கொடுக்கும் கோமான்- அழிவிருந்து
தேவரைக் காத்தருளும் செவ்வேட் பெருமானை
நாவலிக்கப் பாடுவோம் நாம்.

'பழையவன்'

# சந்தனக் கடத்தல் வீரப்பன் சரணடையப் போவதாக அறிவிப்பு

(சென்னை)

சந்தன மரக்கடத்தல் வீரப்பன் சரணடைய விருப்பம் தெரிவித்திருக்கிறார்.

ஒலிநாடா மூலயாக தனது மேற்படி விருப்பத்தை நெற்றிக்கண் ஆசிரியர் மணிக்கு வீரப்பன் அறிவித்திருப்பதாக தெரியவந்துள்ளது.

நேற்று பத்திரிகையாளர்களுக்கு அந்த ஒலிநாடா போட்டுக் காண்பிக்கப்பட்டதாகவும்.

இந்த ஒலிநாடா பற்றி தொலைநகல் மூலம் முதலமைச்சர் பன்னீர்ச்செல்வத்துக்கு தெரிவித்துள்ளதாகவும் பதிலேதும் கிடைக்கவில்லையென்றும் மணி தெரிவித்துள்ளார்.

இந்த ஒலிநாடாவில் வீரப்பன் தன்னைப் பிடிப்பதற்காக அமைக்கப்பட்ட தமிழ்நாடு கர்நாடகஅதிரடிப் படைகளை திரும்ப அழைக்க வேண்டும் என்றும் திருப்பி அழைப்பதுபற்றி வானொலி தொலைக் காட்சி மற்றும் பத்திரிகைகள் மூலம் அறிவிக்க வேண்டும் என்றும் அதன் பின்னரே தான் சரணடையும் இடம்பற்றி பத்திரிகை ஆசிரியருக்கு தெரிவிக்கவிருப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை செல்வி ஜெயலலிதாவிற்கும் இந்த ஒலிநாடாவை அனுப்பி சரணடைவதற்கான வழிவகைகளைச் செய்யுமாறு வீரப்பன் அந்த ஒலிநாடாவில் தெரிவித்துள்ளார். (து)

---

இன்று (18-11-2001) ஞாயிற்றுக்கிழமை காலை 9 30 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறவுள்ள 'கலைஞர் கௌரவிப்பு விழா' குறித்து கௌரவ அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா வழங்கும் வாழ்த்துரை;

## கலைவளம் பெருகப் பாடுபடுங்கள்



எமது இனத்தின் மூத்த கலைஞர்களாக முன்னிலையில் இருந்து வரும் வித்துவ புருஷர்களை அவர்கள் வாழும் காலத்திலேயே கௌரவிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தமை உண்மையிலேயே பெரும்மகிழ்ச்சிக்கு உரியதாகும். தத்தம் துறைகளில் முதிர்ந்த அனுபவமும், திமிர்ந்த ஞானச் செருக்கும் வாய்ந்தவர்களாக கலையுலகில் எமது நாட்டின் முன்னோடிகளாக திகழுபவர்களை இந்து சமய கலாசார திணைக்களம் கலைஞானகேசரி என்னும் இவ் விருதுக்காக தேர்ந்து எடுத்துள்ளமையை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விருதுக்காக தெரிவு செய்யப்பட்டவர்கள் அதற்குரிய வித்துவ திறமைகளையும், ஆளுமைகளையும் கொண்டவர்களாகவே விளங்குகின்றார்கள் என்பது திண்ணம். இப் பெரியார்கள் இன்னும் பல்லாண்டுகள் சீரும் சிறப்புமாக வாழ்ந்து எமது மண்ணில் கலைவளம் பெருகச் செய்யப் பாடுபடவேண்டும் எனவும், வளரும் இளங்கலைஞர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வளர்க்க, உதவ வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டு, இப்பெரியார்களின், அன்பையும் ஆசீர்வாதத்தையும் நாடி எனது வாழ்த்துக்களை மனதார தெரிவித்துக் கொள்கின்றேன.

மக்கள் சேவையிலுள்ள

**கே. என். டக்ளஸ் தேவானந்தா**

செயலாளர் நாயகம், ஈ. பி. டி. பி,
வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு,
புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு
தமிழ் விவகாரங்கள் அமைச்சர்.

(C-2884)

---

# கல்விசார் ஊழியர்களின் விபரங்களை ஆவணப்படுத்த திட்டம்

வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சில் ஊதியம் பெறும் சகல கல்விசார் ஊழியர்களினதும் விபரங்களை ஆவணப்படுத்துவதற்குப் பொது நிர்வாக அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இதற்கேற்ற வகையில், விபரங்களைத் திரட்டும் வகையிலான படிவங்கள் மேலதிக மாகாணக் கல்விப் பணிமனைக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாகவும்,

சம்பந்தப்பட்டவர்கள் படிவங்களைப் பெற்று வலயக் கல்வி அலுவலகங்களூடாக அவற்றை ஒப்படைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. உ-19

---

## ஆண்டின் . . .

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் விளைவதால்—முயற்சிப்பதால் இச்சக்திகள் நடைமுறையில் அருகிப் போகும்.

### அறிவாராய்ச்சி

காதல் விஷயங்களில்கூட இவர்கள் உள்ளுணர்ச்சிகளுக்கு இடமளிக்கமாட்டார்கள். அதிலும் அறிவாராய்ச்சி செய்வார்கள். இவர்கள் ஆராய்ச்சிசெய்து முடிப்பதற்குள்ளாக சந்தர்ப்பம் நழுவிப் போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை சோர்வும், நரம்புத்தளர்ச்சியும், மனத்துன்பமும், தனிமையுணர்வும் இவர்களைத் தாக்கக் கூடியவை. மனத்தை எப்பொழுதும் சந்தோஷமாக இவர்கள் வைத்துக்கொள்ள வேண்டும்: இந்தக்காலத்தில் பிறந்த பெண்கள் பல விதமான அறுவைச் சிகிச்சைகளுக்கு ஆளாக வேண்டியிருக்கும். (தொடரும்)

---

# கட்சிகளுடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பொதுத்தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் சகல கட்சிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல்ஒன்று நாளை மு.ப.10 30 மணிக்கு யாழ். செயலகத்தில் இடம் பெறவுள்ளது

உதவித் தேர்தல் ஆணையாளர் சி நடராசா தலைமையில் இடம்பெறும் இக் கலந்துரையாடலில் மேற்படி கட்சிகளுக்கு பல முக்கிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

(உ-19)

---


# ஈ. பி. டி. பியின் மாபெரும் தேர்தல் பிரசாரக்கூட்டம்

**இடம்:** தெல்லிப்பழை பிரதேச செயலக அருகாமையில்
**காலம்:** இன்று (18.11.2001) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணி

**தலைமை:** க. நாகராசா (ஜே. பி.)
(மகாஜனாக் கல்லூரி முன்னாள் அதிபர்)

**பிரதம பேச்சாளர்:** ச. சிவதாஸன்
(காங்கேசன் தொகுதி வேட்பாளர்)

அனைத்து அன்பு நெஞ்சங்களையும் அன்புடன் வரவேற்கின்றோம்.



காங்கேசன் தொகுதி அமைப்பாளர்

**தி.சிவகுமார் (வேலு)**

(3975)


---


- இரண்டு பேரினவாதக் கட்சிகளுடன் இணங்கிப் போவதை மறுத்து,
- தோல்வி கண்டு வந்த பேரப் பேச்சு அரசியலை நிராகரித்து.
- கடந்த கால அரசியல் தவறுகளால் கறைபடிந்த தலைமைகளை நிராகரித்து,
- வெகுஜனப் போராட்ட அரசியலை வலிமையுடன் முன்னெடுக்க.

**புதிய மற்றும் அரசியல் சக்திக்கு அங்கீகாரம் தாருங்கள்!**

**சி. கா. செந்திவேல்**
முதன்மை வேட்பாளர்
6



**சோ. தேவராஜா**
சட்டத்தரணி
12

# ஜனநாயக இடதுசாரி முன்னணி

(புதிய ஜனநாயக கட்சி)

(3971)

இகலென்ப எல்லா உயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கும்நோய்

குறள்

==================

# வலம்புரி

==================

## உயிருடன் விளையாட்டு

நாட்டில் கடந்த சில வருடங்களாக அரசாங்க வைத்தியர்களின் வேலை நிறுத்தப் போராட்டங்கள் அடிக்கடி ஏற்பட்டு வருகிறது.இந்த நிலைமை யாழ்ப்பாணத்தில் குறைவெனிலும் நாட்டின் ஏனைய பகுதிகளில் சகஜமாகிவிட்டது.

வைத்தியத் தொழில் புரிவது இறைவனின் கொடைகளில் ஒன்று. அதன் மகத்துவத்தை, தார்ப்பரியத்தை டாக்டர்கள் உணர்ந்து கொள்வது மிகவும் அவசியமாகும். டாக்டர்களின் உரிமைகள் மற்றும் அவர்களுக்கான சலுகைகள் வழங்கப்படவேண்டுமென்பதில் இருவேறுகருத்திற்கு இடமில்லை. ஆனால் டாக்டர்களின் வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்படுபவர்கள் ஆட்சியாளர்களோ பணக்காரவர்க்கத்தினரோ அல்ல சாதாரண ஏழை மக்களே பாதிக்கப்படுகின்றனர் என்பதை வேலை நிறுத்தத்தில் ஈடுபடும்டாக்டர் பெருமக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

மக்களோடு அதிலும் நோய்வாய்ப்பட்ட மக்களோடு நேரடித் தொடர்பு கொண்டவைத்திய சேவை நாட்டிலுள்ள அனைத்து சேவைகளிலும் பார்க்க முதன்மையானது உடனடிச் சிகிச்சை கிடைக்கத் தவறின் அதன் விளைவு உயிரிழப்பு எனபதையும அவ்வுயிரிழப்பால் உயிர்வாழ்வோருக்கு ஏற்படுகின்ற துன்ப நிலையும் தங்கி வாழ்வோர் படும் கஷ்ரங்களையும். வைத்தியர்கள் ஓரளவேனும் புரிந்திருந்தால எடுத்தவுடன் வேலை நிறுத்தம், சட்டப்படி ீவலை என்ற பேச்சுககு இடமிருக்காது.

தம்மிடமே நோயாளர்களின் பாதுகாப்பு இருக்கிறதென்ற கோதாவில் அரச டாக்டர்கள் அடிக்கடி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் தனியார் வைத்திய நிலையங்கள் அதிகரிப்பதற்கும் போலிடாக்டர்கள் தோன்றுவதற்கும் ஆயுள்வேத மருத்துவர்கள் ஆங்கில மருந்தை கொடுப்பதற்கும் வாய்ப்பாகும்

அதன் பின்னர் அந்த ஐயா என்ன இந்த ஐயாவும் அதே குளிசை தருகிறார் என்ற நிலை மக்களிடம் தோன்றிவிடும் பின்பு அசலும், நகலும் ஒன்று தானே?

---

### பரமபிதா காட்டிய பாதை

# பாவஞ்செய்தவன் பசாசானவனுக்கு அடிமை

# இறைவனை விசுவாசித்தால் விடுதலை உண்டு

**- யோவான் (அதி, 8)**



இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி 'நீங்கள் என உபதேசத்தில்நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள். சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்' என்றார்.அவர்கள் அதற்குப் பிரதியுத்தரமாக நாங்கள் ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிறோம். நாங்கள் ஒருக்காலும் ஒருவனுக்கும் அடிமைகளாக இருக்கவில்லை. விடுதலையாவீர்கள் என்று நீர்எப்படிச் சொல்கிறீர் என்றார்கள்.இயேசு அவர்களுக்குப் பதிலாக 'பாவஞ்செய்கிறவன் எவனும் பாவததுக்கு அடிமையாயிருக்கிறான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன். அடிமையானவன் என்றைக்கும்வீட்டிலேநிலைத்திரான். குமாரன் நிலைத்திருக்கிறான். ஆகவே குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள். நீங்கள் ஆப்ரகாமின் சந்ததியாரென்று அறிவேன் ஆனாலும் உங்களுக்குள்ளே என் உபதேசம் இடம் பெறாதபடியால், என்னைக் கொலை செய்யத்தேடுகிறீர்கள். நான் என் பிதாவிடத்தில் கண்டதைச் சொல்லுகிறேன. நீங்களும் உங்கள் பிதாவடத்தில் கண்டதைச் செய்கிறீர்கள் என்றார். அதற்கு அவர்கள் ஆபிரசாமே எங்கள் பிதா என்றார்கள்.

**யார் அந்த ஒரே பிதா**

இயேசு அவர்களை நோக்கி நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்தால் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்வீர்களே! தேவனிடத்தில்கேட்டிருக்கிற சத்தியத்தை உங்களுக்குச் சொன்ன மனுஷனாகிய என்னைக் கொலைத்தேடுகிறீர்கள். ஆபிரகாம் இப்படிச் செய்யவில்லையே! நீங்கள் உங்கள் பிதாவின் கிரியைகளைச் செய்கிறீர்கள்என்றார். அதற்கு அவர்கள் 'நாங்கள் வேசித்தனத்தினால் பிறந்தவர்களல்ல,ஒரே பிதா எங்களுக்குண்டு, அவர் தேவன்' என்றார்கள்.

**தொகுப்பு : மதிவாணர்**

இயேசு அவர்களை நோக்கி 'தேவன் உங்கள் பிதாவாயிருந்தால் என்னிடத்தில் அன்பாயிருப்பீர்கள். ஏனெனில் நான் தேவனிடத்திலிருநது வந்திருக்கிறேன். நான் சுயமாய் வரவில்லை. அவரே என்னை அனுப்பினார். என் வசனத்தை,நீங்கள் ஏன் அறியாமலிருக்கிறீர்கள்?என் உபதேசத்தைக் கேட்க மனமில்லாதிருக்கிறதனால் அல்லவா? நீங்கள உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள், உங்கள் பிதாவினுடைய இச்சைகளின் படி செய்யமனதாயிருக்கிறீர்கள். அவன் ஆதிமுதற் கொண்டு மனுஷ கொலை பாதகனாயிருககிறான்.சத்தியம் அவனிடத்தில் இல்லாத படியால் அவன் சதநியத்திலே நிலை நிற்கவில்லை அவன் பொய்யனும், பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால், அவன் பொய் பேசும் போது,தன் சொந்தத்தில் எடுத்துப்பேசுகிறான். நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொல்லுகிறபடியினால நீங்கள் என்னை விசுவாசிக்கிறதில்லை. என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப் படுத்தக் கூடும்? நான் சத்தியத்தைச் சொல்லியிருக்க நீங்கள் ஏன் என்னை விசுவாசிக்கிறதில்லை தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்களுக்குச் செவி கொடுக்கிறான்.நீங்கள் தேவனால்உண்டாகியிராதபடியால் செவி கொடாமலிருக்கிறீர்கள் என்றார்.அப்பொழுது யூதர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக உன்னைச் சமாரியனென்றும், பிசாசுபிடித்தவனென்றும் நாங்கள் சொல்லுகிறது சரிதானே' என்றார்கள்.

**மரணமில்லை**

அதற்கு இயேசு'நான்பிசாசு பிடித்தவனல்ல. நான் என் பிதாவைகனம்பண்ணுகிறேன் நீங்கள் என்னைக் கனவீனம் பண்ணுகிறீர்கள். நான் எனககு மகிமையைத் தேடுகிறதில்லை. அதைத்தேடி நியாயந்தீர்க்கிறவர் ஒருவர்இருக்கிறார் ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி, 'நீ பிசாசுபிடித்தவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறோம். ஆபிரகாமும், தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள்.நீயோ. ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால் என்றென்றைக்கும் மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்கிறாய் எங்கள் பிதாவாகிய ஆபிரகாமிலும் நீ பெரியவனோ? அவர் மரித்தார். தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள் உன்னை நீ எப்படிப்பட்டவனாக்குகிறாய்' என்றார்கள்.

இயேசு பதிலுக்கு என்னை நானே மகிமைப்படுத்தினால் அந்த மகிமை வீணாயிருக்கும் என் பிதா என்னை மகிமைப் படுத்துகிறவர்.அவரை உங்கள் தேவனென்று நீங்கள் சொல்லுகிறீர்கள, ஆயினும் நீங்கள் அவரை அறியவில்லை. நான் அவரை அறிந்திருக்கிறேன். அவரை அறியேன் என்று சொல்வேனாகில்,உங்களைப்போல நானும் பொய்யனாயிருப்பேன் அவரை நான் அறிந்து அவருடைய வார்த்தையைக் கைக்கொண்டிருக்கிறேன்; உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக்காண ஆசையாயிருந்தான். கண்டுகளிகூர்ந்தான் என்றார்,அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி உனக்கு இன்னும் ஐம்பது வயதாகவில்லையே! நீ ஆபிரகாமைக் கண்டாயோ? என்றார்கள்; அதற்கு இயேசு ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேனென்றுமெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" எனறார் அப்பொழுது அவர் மேல் எறியும்படி கற்களை எடுத்துக் கொண்டார்கள் இயேசு மறைந்து அவர்கள் நடுவே கடந்து தேவாலயத்தை விட்டுப் போனார். ■

---

### சோதிட பலன்

# ஆண்டின் பன்னிரண்டு காலப்பகுதியினுட்பிறந்த ஜாதகர்களின் குணாதிசயங்களும், பலனும

(சென்றவாரத் தொடர்ச்சி)

**சுக்கிரவீட்டின் பலன்கள்**

"ஏப்பிரல் 20ந் திகதியிலிருந்து மேமாதம் 20ந்திகதி வரையுள்ள காலத்தில்பிறந்த ஜாதகர்கள் சுக்கிர வீட்டிற்குரியவர்கள். காதல், நட்பு, மற்றவர்கள் மனத்தைப் பிரமிக்கச் செய்தல்,அழகு,ஆராதனை கலையார்வம் ஆகிய குணங்கள் சுக்கிரனைச்சேர்ந்தவை.எனவே இவ் வீட்டினைச் சேர்ந்தவர்கள் கலைஞர்களாக, பாடகர்களாக இருப்பதில் ஆச்சரியமில்லை. நன்கு உடை உடுத்துவதிலும், நண்பர்களுக்கு நல்ல விருந்துகள் அளிப்பதிலும் ஆர்வமுள்ளவர்கள்,இவர்கள் தங்கள் சக்திக்கு மீறிஆடம்பரம் செய்வார்கள். எனவே பல சமயங்களில் இவர்கள், நிலைமைக்கு மேலாகவே செல்வந்தர்களாகக் கருதப் படுவார்கள்.தங்கள் கொள்கைகளை மிகவும் வலியுறுத்தள் பவர்கள்,மற்றவர்கள் சொதில் வதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

**சூழ்நிலை மாற்றும்**

எனினும் உணர்ச்சி வசப்பட்டவர்கள்.பேச்சில் நிதானமில்லாமல் கடுமையாகப் பேசி,விரோதிகளை எச்சம் பாதித்துக் கொள்வார்கள் ஆனால் பேசியதற்காகப்

**வராகமிஹிரர்**

பின்னால் வருத்தப் படுபவர்கள்,இதனால என்ன பயன்? சூழ் நிலை இவர்களை பெரிதும மாற்றக கூடியது.மகிழ்ச்சியற்ற,ஏழ்மையான சூழ் நிலை இவர்கள்மனதைக் கெடுத்து இவர்கள் சக்திகளையெல்லாம் வற்றச் செய்ய கூடியது.

காதல் விஷயங்களில் இவர்கள் பொறாமைக் குணம் கொண்டவர்கள். இவர்கள் இளம் வயதில் திருமணம் செய்து கொளளாமல் இருப்பது நல்லது ஏனெனில் அது அவ்வளவுமனோரம்மியமானதாகஇருப்பதில்லை சண்டை சச்சரவுகள் ஏற்பட்டுத்தங்கள் முடிவுக்காகப் பின்னர் வருந்துவார்கள். இவர்களைப் பிடிக்கக் கூடிய முக்கியமான வியாதிகள் மூக்கு. தொண்டைசம்பந்தமான வைகளாகும்.

**சுக்கிரவீட்டு எதிர்மறை**

செபடம்பர் 21ந திகதியிலிருந்து அக்டோபர் 20ந் திகதி வரை பிறந்தவர்கள் இவ்வீட்டிற் குரியவர்கள். இந்த ஜாதகர்கள அறிவியல் காரியங்களில் பெரும்நாட்டங்கொண்டவர்கள், ஆழ்ந்த கட்டுரைகளையும், விஷயங்களையும் ஆர்வததுடன் படித்துத் தெரிந்து கொள்வார்கள். எந்தக் காரியத்தையும் தீவிரமாகச் சிந்தித்து மனத்திற்குள் விவாதித்தே ஒரு முடிவுக்கு வருவார்கள். இவர்கள சிறந்த டாக்டர்கள, வழக்கறிஞர்கள், நீதிபதிகளாக விளங்குவார்கள்.

முன்னர் குறிப்பிட்டவர்களைப் போன்று இவர்களும் காதல் விஷயங்களில் தீவிரமானவர்கள். ஆனால் இவர்கள்காதல் உணர்ச்சி வசப்பட்டதாக, காமம் சம்பந்தப்பட்டதாக, உடலுறவு சம்பந்தப்பட்டதாக இல்லாமல், அறிவு சம்பந்தப்பட்டதாக தோழமையுணர்ச்சிக்கு முக்கியத்துவம் உளளதாக விளங்கும். இவர்களிடம் அமானுஷ்யமான சக்திகள் குடிகொண்டிருக்கும், எதைப்பற்றியும் மனத்தால் உணரும் சக்தி படைத்தவர்கள். ஆனால் இந்த ஆத்ம சக்திக்கு மதிப்பளிக்காமல் அறிவாராய்ச்சி மூலமே முடிவுக்குவர இவர்

(06ம் பக்கம் பார்க்க)

---

## தினசரி தியானம்

## வைகறையில் துயில் எழு

ஏதங்கள் அறுத்து எம்மை ஆண்டருள் புரியும்
எம்பெருமான் பள்ளிஎழுந்தருளாயே!

-மாணிக்கவாசகர்

இறைவா, உன்னைப் போற்றுதற்குரிய பிரம்ம முகூர்த்தத்தில் நான் உறங்கிக் கொண்டிருப்பது முறையோ!

சூரியோதயத்துக்கு ஒரு மணிநேரத்துக்கு முன்பே பிரம்ம முகூர்த்தம் உச்சத்துக்கு வந்து விடுகிறது. அப்பொழுது தூங்கிக் கொண்டிருப்பவர்களுக்கு அருள் துறையிலோ, பொருள்துறையிலோ முன்னேற்றமில்லை. வைகறையில் விழித்தெழுந்திருப்பவர்களுக்கு எல்லாவித முன்னேற்றமும உண்டு.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

# இலங்கை அணியிடம் மேற்கிந்திய அணி தோல்வி

[கொழும்பு)

காலி சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெற்ற இலங்கை மேற்கிந்திய தீவு அணிகளுக்கு இடையிலான கிறிக்கெட் ரெஸ்ட் போட்டியின் இறுதிநாளான நேற்று இலங்கையணி மேற்கிந்திய தீவுகள் அணியை 10 விக்கட்வித்தியாசத்தில் தோற்கடித்துள்ளது.

முதலாவது இனிங்சில்துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி அனைத்து விக்கட்டுகளையும் இழந்து 448 ஓட்டங்களைப் பெற்றது

இதில் மேற்கிந்திய தீவுகள் அணியின் தலைவர் பிறைன் லாறா 178 ஓட்டங்களைப் பெற்றார். முத்தையாமுரளிதரன் பந்து வீச்சில் 125ஓட்டங்களுக்கு 6 விக்கட்டுகளை கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கையணி முதல் இனிங்சில் 9 விக்கெட் இழப்பிற்கு 590 ஓட்டங்களைப் பெற்றது. குமார்சங்கரா 140 ஓட்டங்களையும் கஷான் திலகரட்ண 105 ஓட்டங்களையும் மகில ஜெயவர்த்தன 99 ஓட்டங்களையும் பெற்றனர்:

இரண்டாவது இனிங்சில் மேற்கிந்திய தீவுகள் அணி 144 ஓட்டங்களைப் பெற்றது பந்துவீச்சில் முத்தையாமுரளிதரன் 44 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கட்டுகளை கைப்பற்றினார்.

பதிலுக்கு இலங்கையணி விக்கட் இழப்பின்றி 6 ஓட்டங்களை பெற்று வெற்றியை தனதாக்கிக் கொண்டது

இதில் சிறந்த ஆட்ட நாயகனாக முத்தையா முரளிதரன் தெரிவுசெய்யப்பட்டார்

(ந-உ-4 10)

---

## பொலிஸ்

தமிழரசுக் கட்சி எம் பிஇ மு. இராசமாணிக்கத்தை தோற்கடித்து பட்டிருப்புத் தொகுதியின் ஐக்கிய தேசியக் கட்சியின்எமபியாகஇருந்தஅமரர் எஸ். தம்பிராசாவின்மகனான ஜெயக்குமார் இரண்டு பிள்ளைகளுக்குத்தந்தையாவார்.

கடந்த 15 வருடமாக கொழும்பில் வசித்து வந்த இவர் தேர்தலில் போட்டியிடுவதற்காக இரண்டு வாரங்களுக்கு முன்னரே மட்டக்களபபில் உள்ள அவரது சொந்தக்கிராமமாவ எருவிலுக்கு வந்திருந்தார்.

இதேவேளை சுட்டுக் கொல்லப்பட்ட த. ஜெயக்குமார் முன்னாள் பட்டிருப்பு எம்பி அமரர் எஸ் யு. எதிர்மன்ன சிங்கத்தின் பெறாமகன் என்பதும் குறிப்பிடத்தக்கது (வ)

---

## வாக்கு

வாக்குச்சிட்டுக்கள் மற்றும வாக்குப் பெட்டிகளைவழங்க முன்னர் தேர்தல் ஆணையாளர் மீண்டும் ஒரு தடவை அவற்றைப் பார்க்க வேண்டுமென்று ஐ.தே.கட்சிசெயலாளர் தேர்தல் ஆணையாளரைக் கேட்டுளளார். [இ]

---

## பொ ஜ ஐ முன்னணி

இயமனுவல பிரதம மந்திரி ஐ.தே.கட்சித்தலைவர் தேர்தல் ஆணையாளர் மற்றும சட்டமா அதிபர் ஆகியோர் எதிராளிகளாகக் குறிப்பிடப் பட்டுள்ளனர்.

மனுதாரர் டொன் றொபேட் ஹெட்நாட் மனுவை நீதிமனறுக்கு தபால மூலம் அனுப்பிவைத்துள்ளார். (இ)

---

## வாகனத்திற்கு,

அறநாயககவில பிரசார நடவடிக்கைக்காக ஆதரவாளர்களை ஏற்றிச் சென்ற வாகனத்தை வழி மறித்த சிலர் அதற்குள் இருந்த பொதுஜன ஐககிய முனனணி ஆதரவாளாகளை தாககிவிட்டு வாகனத்தையும் தீயிட்டு கொளுத்தியுளளனர்.

ஐககிய தேசியக் கட்சித் தொண்டர்களே இத் தாககுதலை மேற்கொண்டதாக மாவனல்ல பொலிசார் தெரிவித்துள்ளனர் (ந-4)

---

# மூத்த கலைஞர்கள் இன்று கௌரவிக்கப்படுவர்

[யாழ்ப்பாணம்]

வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சின் ஏற்பாட்டில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் யாழ்மாவட்டத்தில் உள்ள மூத்தகலைஞர்களைக் கௌரவிக்கும்நிகழ்வு இன்று நடைபெறும்

யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் தலைமையில் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளர் வே.இரகுநாதன் கலந்து கொள்வார். [இ]

---

# இன்று விசேட பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கத்தின் யாழ்ப்பாணப் பிரிவின் விசேட பொதுக்கூட்டம் இன்று முற்பகல் 11 மணிக்கு நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் உப பணிமனையில் நடைபெறுமென்று சங்கச் செயலாளர் ஐ சிவலோகநாதன் அறிவித்துள்ளார்.

(இ)

---

## கொல்லப்பட்ட

பிலிருந்து விலகிச் சென்று, இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்டவர்கள் என்றும் இந் நபர்களை தமது அமைப்புடன்தொடர்புபடுத்தி செய்திகள் வெளியாவதால தமது கட்சிபற்றி மக்கள்தப்பபிப்பிராயம் கொள்வர் என்றும் அவர்களுக்கும் தமக்கும் எதுவித தொடர்பும் கிடையாதென்றும் புளொட்அமைப்பினர்மேலும் தெரிவித்துள்ளனர்.

(இ)

---

## மட்டு.எல்லாளன்

களாகப் போட்டியிட வேண்டாம் என்றும் போட்டியிடுபவர்கள் அதில இருந்து விலகிக கொள்ளுமாறும் எல்லாளன் படை துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டிருந்தது.

இத் துண்டுப்பிரசுரத்தினை அடுத்து பொதுஜன ஐக்கிய முன்னணியின் மட்டக்களப்பு முதன்மைவேட்பாளர் குமரையா, தமோதரம்பிள்ளை இம்மாதம் 4மதிகதி போட்டியில் இருந்து விலகுவதாக அறிக்கை விட்டிருந்தமையும் குறிப்பிடத் தக்கது.

[வ]

---

30 ஆண்டு காலமாய் குன்றாத தரம் வாய்ந்த சுகாதார முறைப்படி உணவிற்கும் வைத்தியர்களுக்கும் விஷேசமாக தயாரிக்கப்பட்டது.

சுத்தமான

**வி.எஸ்.பி, நல்லெண்ணெய்**

தயாரிப்பாளரும், ஏகவிநியோகஸ்தரும்

**பரிமளா ஸ்ரோர்ஸ்**

26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்

(கி-1986)

---

# தமிழர்கள் விரும்பினால் பிரிந்து செல்லலாம்எனக்கூறியவர்கள்யார்?

## காமினி அத்துக்கோறள ஜே.வி.பியிடம் கேள்வி

(கொழும்பு)

ஜே.வி.பி தலைவர் அமரர் ரோஹன விஜயவீரா, தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டுமென்று தனது 'ஈழம் இராட்சியத்துக்குளமதுதீர்வு' என்ற நூலில் குறிப்பிட்டிருந்தார்.

அந்நூலில் 'தமிழர்கள் விரும்பினால் பிரிந்து செல்லலாம்' அதனைஜே வி.பி ஆதரிக்குமென்றும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மாநாடொன்றை நடத்திய விஜயவீர, வடக்கை விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கும் தெற்கை ஜே.வி.பிக்கும் ஒதுக்குவதே தமது திட்டம் என்றும் கூறியிருந்தார்.

இவற்றையெல்லாம் மேற்கோள்காட்டி விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டவர்கள் ஜே வி பியினரா அல்லது ஐ.தே கட்சியினரா என்று ஐ தே கட்சிப் பிரமுகர் காமினி அத்துக்கோறளை ஜே.வி.பியிடம் கடிதம் மூலம் கேள்வி எழுப்பியுள்ளார்

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது வடக்குக் கிழக்கை ஐ தே. கட்சி விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப் போகின்றது என ஜே. வி. பியால் பிரசாரம் செய்யப்படுகிறது. இதில் எவ்வித உண்மையும்இல்லை. அவ்வாறு கையளிப்பதாக தேர்தல் விஞ்ஞாபனத்தில் எழுதியுள்ளோமா? அதனை தங்களால்காட்ட முடியுமா? எம்மைப்புலிகளுடன் இணைத்து பேசும் தங்கள் அமைப்பு கடந்த காலத்தில் புலிகள் தொடர்பாக கொண்டிருந்த நிலைப்பாட்டை நினைத்துப்பார்க்க வேண்டுமென்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

---

### கச்சதீவுப் பகுதிக்குசெல்ல

# நடவடிக்கை எடுக்கப்படும் அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

கச்ச தீவுப் பகுதியை புனரமைத்து, அதனை மக்கள் பயன்படுத்தும் வகையில் உருவாக்கித் தருவதாக வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

நீண்டகாலமாக கச்சதீவுப் பகுதிக்கு மக்கள் செல்வதற்கு படைத்தரப்பினர் மறுத்து வருகின்றனர்.

இந் நிலைமை தொடர்பாக தேர்தல் முடிந்தவுடன் ஓர் உறுதியான முடிவெடுக்கவுள்ளதாகவும் அடுத்த ஆண்டின் முற்பகுதியில் இப்பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதுடன் அங்கு மக்கள் சென்று வருவதற்கு ஆவன செய்வதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்துள்ளார்.

(இ- 10)

---

# அனுமதியற்ற துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்படும்

## மட்டு.பொலிஸ் அத்தியட்சகர்

மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில அனுமதிப்பத்திரமின்றி துப்பாககி வைத்திருப்பவர்களிடமிருந்து அவைபறிமுதல் செய்யப்படுமென மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுசில் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில், தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சி வேட்பாளர்கள் மற்றும் சுயேட்சைக் குழு வேட்பாளர்களுக்கான ஆலோசனைக்கூட்டம நேற்று நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்துளளார்.

அக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டத்திற்கு முரணான வகையில் ஆயுதங்களுடன் சென்று தேர்தல் பிரசாரங்களில் எக்கட்சியினரும் ஈடுபடக்கூடாது இதனை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

வேட்பாளர்கள் தேர்தல் சட்டங்களை அனுசரித்தே பிரசாரங்களில் ஈடுபடவேண்டும். சட்டத்திற்கு முரணாக ஒட்டப்படும் சுவரொட்டிகள் மற்றும் பதாதைகளை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வேட்பாளர்களின் பாதுகாப்புக்கென இரு பொலிஸ் உத்தியோகத்தர்களைவழங்க பொலிஸ் திணைக்களம் முடிவெடுத்துள்ளதெனவும் வேட்பாளர்களுக்கு அச்சுறுத்தல் காணப்படுமிடத்து அவர்களுக்கு மேலதிக பாதுகாப்பு வழங்கப் பொலிசார் தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ந-4)

---

# கண் பரிசோதனை

[அளவெட்டி]

கண் பரிசோதித்து இலவச மூக்கு கண்ணாடி வழங்குவதற்கான பதிவுகள் இன்றும் நாளையும் அளவெட்டி முற்போக்கு வாலிபர் சங்கத்தில் நடைபெறவுள்ளன. [உ-237]

# உரையாடல் கட்டணம் இலவசம்

(யாழ்ப்பாணம்]

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இன்று காலை 10 முதல்12 மணிவரை யாழ் சேவையின்ஊடாக இடம்பெறும் கேள்வி பதில்களுக்கான நிகழ்வில் தொலைபேசி கட்டணம் கேள்வி எழுப்பப்படும் தொலைபேசிகளின் இலக்கங்களுக்கு பணம் அறவிடமாட்டாதென ஈ-பி-டி-பியின் தகவல் தொடர்பாளர் க.திவாகர் அறிவித்துள்ளார்.

[ந]

---

## ஐ-தே- கட்சி

ளது.

இதுஇவ்வாறிருக்க மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பாதுகாப்புத் தொடர்பாக நேற்றுக் காலை மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது இக் கலந்துரையாடல் நடைபெற்று 24 மணி நேரத்தில் இத் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை பொலிஸ் வட்டாரங்களை திகிலடைய வைத்துள்ளது என்பதும். 2001ம் ஆண்டின் பொதுத் தேர்தலில் சுட்டுக் கொல்லப்பட்ட முதலாவது வேட்பாளர் ஜெயக்குமார்என்பதும் இங்குகுறிப்பிடத்தக்கது. (வ)

---

## செயலாளர்களுடன் நாளை சந்திப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்பாளர் குழுவினர் தேர்தலில்போட்டியிடும்கட்சிகளின் செயலாளர்களைச் நாளைசந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர்.

ஐரோப்பிய சமூகத்தின் சார்பாக எதிர்வரும் டிசம்பர் 5ந்திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றப் பொதுத் தேர்தலைக் கண்காணிக்க ஐந்துபேர் கொண்ட கண்காணிப்பாளர் குழுவினர் கொழும்பு வந்துள்ளனர்.

இக்குழுவினர் தேர்தல் திணைக்களத்தில் கட்சிகளின் செயலாளர்களைச் சந்தித்து எதிர்வரும் பொதுத் தேர்தல் நிலைமைபற்றிபேசவுள்ளனர்.

இச்சந்திப்பில் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவும் கலந்து கொள்வார். (இ)

---

# விபத்தில் காயம்

(அளவெட்டி)

யாழ்ப்பாணம் அவன்கோவிலுக்கு முன்பாகநேற்றுமாலை இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் தலையில் காயமடைந்தார்.

சின்னையாதில்லையம்பலம் என்பவரே காயமடைந்து யாழ் வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டவராவர்.

(ந-237)

# ஈ.பி.டி.பியின் பிரசார கூட்டம்

[யாழ்ப்பாணம்]

ஈ. பி. டி. பியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் இன்று மாலை 3 30மணிக்கு தெலலிப்பளை பிரதேச செயலக அநகாமையில் முன்னாள் அதிபர் க. நாகராசா தலைமையில் நடைபெறும் இதில் முன்னாள் எம்.பி. சிவதாஸன் சிறப்புரையாற்றுவார் என ஈ. பி. டி. பியின் காங்கேசன் தொகுதி அமைப்பாளர் தி; சிவகுமார் [வேலு] அறிவித்துள்ளார்.

[ந]

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் நவம்பர் 18-ம் திகதி அச்சிட்டு வெளிப்பிடப்பட்டது;